திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, பாலாற்றிலிருந்து பல ஏரிகளுக்கு இதே போன்று ஸ்பிரிங் சேனல் மூலமாக தண்ணீர் செல்லுகிறது. அவைகள் எல்லாம் காலப்போக்கிலே அழிந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஸ்பிரிங் சேனல்களை மீண்டும் புதுப்பிப்பதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா? அது மட்டுமல்ல, பாலாற்றிலிருந்து மணல் அதிகமாக எடுப்பதன் காரணமாக இந்த நீர் ஊற்றானது பாதிக்கப்படுகின்ற நிலைமை இருக்கிறது. அதைத் தடை செய்கின்ற திட்டம் ஏதாவது அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, வரத்துக் கால்வாயை மராமத்து செய்யக் கூடாது என்ற விதி ஏற்கனவே இருக்கிறது. ஒவ்வொரு ஃபீடிங் சேனலும் மராமத்து செய்யப்படாத காரணத்தினாலே எந்த ஏரிக்கும் தண்ணீர் வரத்து தடைபட்டிருக்கிறது. ஆகவே, அனைத்து நீர்ப்பாசன குளங்களுக்கும் வரத்துக் கால்வாயை மராமத்து செய்கின்ற திட்டத்தை அரசு அமல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அது இந்த வறட்சி நிவாரணத்திலே எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. எஸ். ஆர். முனிரத்தினம் : தலைவர் அவர்களே, திருவள்ளூர் தொகுதியில் உள்ளடங்கிய பூண்டி ஒன்றியத்தில் கடந்த கழக ஆட்சிக் காலத்தில்..... (மணியடிக்கப்பெற்றது.)

புல்லூரில் நீர்த்தேக்கம்.

70.—(*வினா எண் 499) திரு. ஆர். மகேந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதி, புல்லூரில் நீர்த் தேக்கம் கட்டும் திட்டம் எப்பொழுது செயற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் வாணியம்பாடி வட்டம் புல்லூர் கிராமத்திற்கருகே பாலாற்றின் குறுக்கே நீர்ப்பரப்பு நீர்த் தேக்கம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1989 ஏப்ரல் 20]

அமைக்கும் திட்டம் அரசினால் பரிசீலனை செய்யப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்பட்டால் பாலாற்றின் கரையிலே பல இடங்களில் செயல்பட்டு வரும் குடிநீர்த் திட்டங்கள் செயலற்றுப் போகும் என்ற காரணத்தினாலும், பொருளாதார அடிப்படையில் இத்திட்டம் ஏற்புடையதாக இல்லாத காரணத்தினாலும் கைவிடப்பட்டது. எனவே மேற்கண்ட கேள்விக்கு இடமில்லை.

(திரு. எம். அப்துல் லத்தீப் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அப்துல் லத்தீப் அவர்களே, புல்லூருக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்?

திரு. எம். அப்துல் லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புல்லூர் அணைக்கட்டுத் திட்டம் என்பது ஏறக்குறைய 30 ஆண்டுகளாக முறையாக ஆய்வு செய்யப்பட்டது. இது அந்தப் பகுதிக்கு மட்டும் அல்லாமல் வட ஆற்காடு மாவட்டத்திற்கே இன்றியமையாத ஒரு திட்டம் என்ற அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு திட்டமாகும். ஆனால் ஆந்திராவினுடைய ஒரு பகுதி இதிலே நீரில் மூழ்குகின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், அந்த ஆந்திர அரசாங்கத்தினுடைய முறையான ஒப்புதல் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் தள்ளிப் போட்டுக்கொண்டே வரப்பட்டது என்று சொல்லப்பட்டது. இப்பொழுது அமைச்சர் சொல்வதைப் பார்த்தால் வேறு விதமாக இருக்கிறது. அவர்கள் வேறு காரணங்களைச் சொல்கிறார்கள். எனவே, எல்லோரும் ஏற்றுக்கொண்ட இந்தத் திட்டத்தை, இதை அமல்படுத்துவதிலே அரசு முனைப்புக் காட்ட வேண்டும். அப்படி காட்டுமா என்று அறிய விரும்புகிறேன். அமைச்சர் சொன்ன காரணம் சரியான காரணம் இல்லை என்பதை.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வினாவா? விவாதமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, இது வட ஆற்காடு மாவட்டத்திற்கு எல்லோரும் எதிர்பார்க்கின்ற ஒரு திட்டம் அல்ல. இரண்டாவது இந்தப் புல்லூர் அணைக்கட்டினால் பாசனத்திற்கும் வாய்ப்பு இல்லை. இதனுடைய முக்கிய நோக்கமே புல்லூர் அணைக்கட்டில் தண்ணீர் இல்லாத காலங்களில் பாலாற்றில் வருகின்றத் தண்ணீரைத் தேக்கி விடுவது; அவ்வளவு தான். ஆனால் அதனுடைய விளைவு என்ன ஆகும் என்று கேட்டால் புல்லூர் அணைக்கு கீழே கிட்டத்தட்ட பாலாற்று அணைக்கட்டு வரையில் இருக்கின்ற 30,000 பம்பு செட்டுகள் — அங்கே தண்ணீர் தேக்கப்படுவதால் இங்கே கிணற்றுக்கு நீர்வரத்து இல்லாமல் வறண்டு போய்விடும். எனவே விவசாயம் பாதிக்கப்படும். இரண்டாவது வழக்கமாக பாலாற்றிலே தண்ணீர் அங்கேயே அதனுடைய புல்லூரிலேயே தேக்கப்பட்டுவிட்டால் அதற்குக் கீழே இருக்கின்ற கிட்டத்தட்ட நம்முடைய காஞ்சிபுரம், செங்கற்பட்டு வரையில் இருக்கின்ற எல்லா ஊர்களும் குடிநீருக்கு பாலாற்றிலிருந்துதான் தண்ணீர் எடுக்கிறார்கள். எனவே, அந்தக் குடிநீருக்கே தண்ணீர் இல்லாமல் போய்விடும். மூன்றாவதாக, பொருளாதார

விதத்திலேயும் இந்தத் திட்டம் சரிப்பட்டு வராது என்று அரசு கணித்திருக்கிறது. இவற்றையெல்லாம் விட மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் சொன்னதைப் போல, இந்த அணையைக் கட்டுகிறபோது 192 ஏக்கர் ஆந்திரப் பகுதியிலே இருக்கிறது, அந்த ஆந்திரப் பகுதியிலே நம்முடைய நிலத்தடி நீர் போய், அங்கே ஆராய்ச்சி செய்யவும் முடியவில்லை. அந்த அரசிற்கு இரண்டு, மூன்று தடவை எழுதிப் பார்த்தோம். ஆனால் அவர்கள் சொன்னார்கள், வேண்டுமானால் உங்களுடைய ஊருக்குள்ளே அணை கட்டிக் கொள்ளுங்கள் என்று. எங்கள் ஏரியாவிலே காட்ச்மெண்ட் ஏரியா இருக்கக்கூடாது என்று தெரிவித்து விட்டார்கள். அதையும் தள்ளி, ராமநாயக்கன் பாளையம் பக்கத்தில் நம் தமிழ்நாட்டு எல்லைக்குள் கட்டலாம் என்று பார்த்தால், அதனுடைய மதிப்பீடு மிக அதிகம். ஆனால் அதனாலே வருகிற பயன் மிகக் குறைவு. எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு தான் இந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

சென்னை சாக்கடை வடிகால் அமைப்பைச் சீரமைக்கும் திட்டம்.

86—(*வினா எண். 346) திரு. பொன் விஜயராகவன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் மிகப் பழமையான சாக்கடை வடிகால் அமைப்பை நவீன முறையில் சீரமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, ஆம்.

திரு. பொன். விஜயராகவன் : தலைவர் அவர்களே, எந்த முறையில் சீரமைப்பதற்கான திட்டத்தை வகுத்திருக்கின்றார்கள் எப்போது அது நடைமுறைக்கு வரும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. பழைய கழிவுநீர் அகற்று நிலையங்கள் புதுப்பிக்கப்பட்டு, அவைகளின் திறன் அதிகப்படுத்தப்பட்டு வருகிறது. அதுமட்டுமின்றி பாதாளச் சாக்கடை பராமரிப்பதில் நவீன முறைகள் கையாள வாரியம் ஈடுபட்டு வருகிறது. வெகுகாலமாகவே பாதாளச் சாக்கடை நுழைவழிகளில் தொழிலாளர்கள் இறங்கி சாக்கடைக் குழாய்களைச் சுத்தம் செய்து வருகிறார்கள். இதனை மாற்றி, இப்பணி சிறிது சிறிதாக இயந்திர மயமாக்கப்பட்டு வருகிறது. இப்பணிக்காக இராட்சத இயந்திரம் இங்கிலாந்திலிருந்து தருவிக்கப்பட்டு, பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இருந்தாலும் பாதாளச் சாக்கடைகளில் படியும் வண்டலை நீக்கும் பொருட்டு கணிசமான அளவில் உள்நாட்டு இயந்திரங்களும் பயன்படுத்தப்